

சென்னை, மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நேற்று முன்தினம் (28.08.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 90.52 கோடி ரூபாய் மதிப்பிலான 150 BS VI ரக புதிய பேருந்துகளின் இயக்கத்தை, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன், மா.போ.க. இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராசன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியின் தந்தை அன்பில் பொய்யா மொழியின் 25ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரது இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாநகரச் செயலாளர் மதிவாணன், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, பொதுக்குழு உறுப்பினர் கிராப்பட்டி செல்வம் உள்பட பலர் உள்ளனர்.

### ரூ. 90.52 கோடி மதிப்பீட்டில் அதி நவீன வசதிகளுடன்

# அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 150 புதிய பேருந்துகள் !

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 30 -

**முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சென்னை, மாநகர் போக்குவரத்துக் கழக, மத்திய பணிமனையில் நேற்று முன்தினம் (28.08.2024), அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு, 90.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் BS VI 150 புதிய பேருந்துகளின் இயக்கத்தை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்கள்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (28.08.2024) சென்னை, மாநகர் போக்குவரத்துக் கழக, மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 90.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் BS VI 150 புதிய பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்கள்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட BSVI 200 புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. முதற்கட்டமாக 150 BSVI புதிய பேருந்துகள் இன்று முதல் இயக்கப்பட்டது. புதிய பேருந்தில் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் எளிதாக பயணிக்கும் வகையில் கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்கள் உள்ளது.

**BSVI புதிய பேருந்தில் பயணிகளுக்கான முக்கிய அம்சங்கள்:**

- இந்தியாவிலேயே முதல் முறையாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில், பயணிகளின் சொகுசு பயணத்திற்காக முன்புற Air Suspension வசதி செய்யப்பட்டுள்ளது.
- மூத்த குடிமக்கள் மற்றும் குழந்தைகளின் வசதிக்காக 50 பேருந்துகளில் கீழ் படுக்கை வசதி அமைக்கப்பட்டுள்ளன.
- படுக்கை இரண்டிற்கும் இடையே அதிகரித்த இடம் மற்றும் தடுப்பு வசதியுடன் வழங்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு இருக்கை மற்றும் படுக்கைக்கும் தனித்தனியாக தனிப்பட்ட சார்ஜிங் போர்ட்கள் வழங்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு படுக்கைக்கும் தனித்தனியாக பயணிகள் வசதிக்காக தனித்தனி மின்விசிறி பொருத்தப்பட்டுள்ளது.
- பயணிகளின் பாதுகாப்பிற்காக ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் அபாய ஒலி எழுப்பி (SOS) அமைக்கப்பட்டுள்ளது.
- நடத்துனரால் பயணிகளுக்கு தகவல் அறிவிப்புகளுக்கான ஒலி பெருக்கி (Micro Phone) அமைக்கப்பட்டுள்ளது.
- பயணிகளின் வசதிக்காக டிஜிட்டல் கடிகாரம் அமைக்கப்பட்டுள்ளது.
- பயணிகளின் சுமை பெட்டி மற்றும் சரக்கு பார்சலுக்காகவும் போதிய இட வசதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**BS VI புதிய பேருந்துகளின் முக்கிய அம்சங்கள்:**

- அரசாங்க விதிமுறைகளின் படி காற்று மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் BSVI புதிய பேருந்துகளின் engine வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மேம்படுத்தப்பட்ட பிரேக்கிங் செயல் திறனுக்காக எலக்ட்ரானிக் மேக்னடிக் ரேடர் (EMR) நிறு வப்பட்டுள்ளது.
- இன்ஜின் தீயை முன் கூட்டியே திறம்பட அனுமானித்து, தீ கட்டுபட்டு அடக்கும் அமைப்பு (FDSS) கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், மு.சண்முகம், பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன், மா.போ.க., இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராசன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் 2000 வது குடமுழுக்கு!

# மயிலாடுதுறை - பரசலூர் வீரட்டேஸ்வரர் திருக்கோயிலில் இன்று நடைபெறுகிறது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஆக. 30 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், தமிழர்களின் கலை, பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை பறைசாற்றும் பெட்டகங்களாக திகழும் தொன்மையான திருக்கோயில்களைப் புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் திருப்பணி கள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 2,000–வது குடமுழுக் காக மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பரசலூர், வீரட்டேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு இன்று (30.08.2024) வெகு விமரிசையாக நடைபெற உள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது ஆளுகைக்குட்பட்ட தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள், திருத்தேர்கள் மற்றும் நந்தவனங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், திருக்கோயில்களின் வருவாய் இனங்களை முறைப்படுத்தி வசூலித்தல் போன்ற பல்வேறு பணிகளை செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

திருக்கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆகம விதிப்படி குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். அதன்படி, குடமுழுக்குகள் நடைபெறாத திருக்கோயில்களை கண்டறிந்து திருப் பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தும் பணிகளை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு இந்த அரசு பொறுப்பேற்றபின் கடந்த 39 மாதங்களாக இந்து சமய அறநிலையத்துறை மேற்கொண்டு வருகிறது.



27.08.2024 வரை 1,983 திருக்கோயில் களில் குடமுழுக்கு நடத்தப் பட்டுள்ளன.

இதில் 1,000–வது குடமுழுக்காக சென்னை, மேற்கு மாம்பலம், காசி விஸ்வநாதர் சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு 10.09.2023 அன்றும், 1,500–வது குடமுழுக் காக கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு, வடபுத்தூர், அருள்மிகு வன்னி குமார சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு 24.03.2024 அன்றும் தவத்திரு ஆதீன பெருமக்கள், ஆன்மிக பெரியோர் கள் மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் வெகு விமரிசையாக நடைபெற்றது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலுக்கு 400 ஆண்டுகளுக்கு பிறகும், காஞ்சி புரம் மாவட்டம், சாத்தனஞ் சேரி, கரியமாணிக்க வரத ராஜ பெருமாள் திருக்கோ யிலுக்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு பிறகும், இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம், கங்காதீஸ்வரர் திருக்கோயிலுக்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு பிறகும், திருநெல் வேலி மாவட்டம், அரிகேச வநல்லூர், பெரியநாயகி சமேத அரியநாத சுவாமி திருக்கோயிலுக்கு 123 ஆண்டுகளுக்கு பிறகும், வேலூர் மாவட்டம், வெட்டுவானம், திரௌபதியம் மன் திருக்கோயிலுக்கு 110 ஆண்டுகளுக்கு பிறகும், ஐந்து திருக்கோயில்களுக்கு 100 ஆண்டுகளுக்கு பிறகும், ஆறு திருக்கோயில்களுக்கு 70 ஆண்டுகளுக்கு பிறகும், 16 திருக்கோயில்களுக்கு 50 ஆண்டுகளுக்கு பிறகும், 15 திருக்கோயில்களுக்கு 30 ஆண்டுகளுக்கு பிறகும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**தொன்மையான திருக்கோயில்கள் புனரமைப்பு!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1,000 ஆண்டுகள் முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள 2022 – 2023 ஆம் நிதியாண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தலா ரூ.100 கோடி வீதம் ரூ.300 கோடியை அரசு மானியமாக வழங்கி உள்ளார். அதன்படி 2022 – 2023 ஆம் நிதியாண்டில் ரூ.158 கோடி மதிப்பீட்டில் 113 தொன்மையான திருக்கோயில்க ளும், 2023 – 24 ஆம் நிதியாண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 84 திருக் கோயில்களும் அரசு மானியம், திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் புனரமைத்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிராமப்புற திருக் கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள ஆண்டுதோறும் தலா 1,000 என்ற எண்ணிக்கை 1,250 ஆகவும், நிதியுதவி தலா ரூ.1 லட்சம் என்பது ரூ.2 லட்சமாக உயர்த் தப்பட்டு இதுவரை 3,750 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 3,750 ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு ரூ. 150 கோடி திருப்பணி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரை 9,415 திருக்கோயில் களில் ரூ.5,351.48 கோடி மதிப்பீட்டிலான 20,649 திருப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் 8,276 திருப்பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் 9,731 திருக்கோயில்களில் திருப் பணிகள் மேற்கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி திருக்கோயில்களை மேம்படுத்தும் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு அனைத்து தரப்பினரும் பாராட்டிடும் வகையில் செயலாற்றி வரும் இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் மணி மகுடமாக 2,000 – வது குடமுழுக்கு நடைபெறும் மயிலா டுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பரசலூர், அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் அமைச்சர் பெருமக்கள், தவத்திரு ஆதீன பெருமக்கள், சமய சான்றோர்கள் மற்றும் இறையன்பர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தருமபுரம் ஆதீனத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் வரும் திருக்கடையூர், அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான பரசலூர், வீரட்டேஸ்வரர் திருக்கோயிலானது 1,000 ஆண்டுகள் தொன்மையானதாகும், அட்டவீரட்ட தலங்களில் ஒன்றாக போற்றப்படும் இத்திருக்கோயில் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமாகும்.

கடந்த 26.06.2011 அன்று இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 12 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் மண்டல மற்றும் மாநில வல்லுநர் குழுக்களின் அனுமதி பெறப்பட்டு ரூ.80.10 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட 9 திருப்பணிகள் நிறைவுபெற்றுள் ளன. அதனை தொடர்ந்து 30.08.2024 அன்று இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் 2,000–வது குடமுழுக்காக நடைபெறும் இக்குடமுழுக்கில் சமய சான்றோர்கள், இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமென இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### அரசியல் பேரியக்கமாம் கழகத்தின் பவள விழாவையொட்டி

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் தலைவர்கள் சிலைகளுக்கு மரியாதை!

## சேலம் கிழக்கு மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

சேலம் ஆக. 30-

சேலம் கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் கழகத்தின் பவளவிழாவையொட்டி சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது சிலைகளைப் பொலிவுபடுத்தி மாலையிட்டு மரியாதை செலுத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தி.மு.கழகத்தின் பவள விழா ஆண்டில் முப்பெரும் விழா!**

தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம், 75 ஆண்டுகளாக மக்களுக்குப் பணியாற்றி, இந்த 2024ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினைக் கொண்டாடுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஒவ்வொரு உடன்பிறப்பும் உள்ளன்புடன் கொண்டாடி மகிழ்ந்த நிலையில், பேரறிஞர் அண்ணா வழியில் தலைவர் கலைஞர் கட்டிக்காத்த இயக்கமாம் தி.மு.க.வின் பவளவிழா ஆண்டு நிறைவினை, கழகம் தொடங்கப்பட்ட நாளான செப்டம்பர் 17 அன்று கொண்டாடி மகிழ இருப்பதால், இந்த முக்கால் நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றில் தி.மு.கழகம் படைத்த சாதனைகள் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மகத்தான திட்டங்கள் திராவிட மாடல் அரசைத் திறம்பட நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள்நலத் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கிச் சுவர் விளம்பரங்கள் எழுதப்படுவதுடன், தமிழ்நாடு முழுவதும் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி, கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திடவும், ஒவ்வொரு ஊரிலும் உள்ள நம் கொள்கைத் தலைவர்களான தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது சிலைகளைப் பொலிவுபடுத்தி, மாலையிட்டு மரியாதை செலுத்துவது என்றும் இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

**கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம்!**

தனது நீண்ட நெடிய அரசியல் அனுபவத்தினால், இந்திய ஜனநாயகத்தைக் காக்கின்ற தூணாகத் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழினைப் போற்றுகிற வகையில் இந்திய ஒன்றிய அரசு 100 ரூபாய் மதிப்பிலான தலைவர் கலைஞர் அவர்களின் உருவம் பொறித்த நாணயம் வெளியிட முன்வந்தமைக்கு இந்த மாவட்டக் கழக கூட்டம் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

அதேவேளையில், மாநில உரிமைக்கான குரலைத் தொடர்ந்து முழங்கிடும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களவையிலும் மாநிலங்களவையிலும் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டு வருகின்ற நிலையிலும், தமிழ்நாட்டுக்கு என்று எந்தச் சிறப்பு திட்டத்தையும் வழங்காமல், முறையான நிதி ஒதுக்கீடு செய்யாமல், இரயில்வே துறையின் திட்டங்களில்கூட பாராமுகமாக நடந்துக் கொள்வதையும் பாரபட்சம் காட்டுவதையும் வழக்கமாக வைத்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு இந்த மாவட்டக் கழக கூட்டம் தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

சேலம் கிழக்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சீரும் சிறப்புமாக நிகழ்ச்சி களை நடத்தி முடித்த மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தின் துணை அமைப்புகளான சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# திருவாரூர் மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவாரூர், ஆக. 30 -

திருவாரூர் மாவட்டக் கழகத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் 3.9.2024 -செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற இருப்பது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, எதிர்வரும் 03.09.2024 - செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் திருவாரூர் விளமல் பொன்தமிழ் திருமண அரங்கில், மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் திருவாரூர் மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறஉள்ளது.

கூட்டத்தில் கழக முப்பெரும் விழா மற்றும் ஆக்கப்பணிகள் குறித்து கருத்து பரிமாற்றங்கள் மற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது.

எனவே அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கிளைக் கழக, வார்டுக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (28.08.2024) நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தொல்லியல் துறையின் சட்டமன்ற அறிவிப்புகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித் துறை அரசு முதன்மைச் செயலாளர் / தொல்லியல் துறை ஆணையர் (மு.கூ.பொ) த.உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன் மற்றும் தொல்லியல் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.